தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2040, ஆனி 24

2009 ஜூலை 8, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்
கிறையொருங்கு நேர்வது நாடு"

புதிய சுமைகள் ஒன்றுதிரண்டு வரும்போது அவற்றைத் தாங்கிக்கொண்டு, அரசுக்குரிய வரி வகைகளைச் செலுத்துமளவுக்கு வளம் படைத்ததே சிறந்த நாடாகும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

91—

குளிர்பதனக் கிடங்கு

***64362—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரிப்பட்டினம் தொகுதியில் மல்லிகைப் பூ குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2009 ஜூலை 8

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காவேரிப்பட்டினம் தொகுதியில் மல்லிகைப் பூ குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் பெருமக்கள் நெல், கரும்பு போன்ற பயிர்களையெல்லாம் தொடர்ந்து பயிர் செய்துவந்து, தொடர்ந்து நட்டம் ஏற்படுகின்ற காரணத்தினாலே, இப்படிப் பணப் பயிர்கள் பயிரிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக, காவேரிப்பட்டினத்தை மையமாகக் கொண்டு, காவேரிப்பட்டினம், பாலக்கோடு, பெண்ணாகரம் ஆகிய பகுதிகளிலிருந்து ஓசூர் வரையிலே பூக்கள் அதிகமாக விளையக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதற்கேற்ற சூழ்நிலையும், தட்பவெப்ப நிலையும் சரியாக இருக்கின்ற காரணத்தினாலேதான் இப்பொழுது பூக்கள் அந்தப் பகுதியிலே அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. குறிப்பாக, மல்லிகைப் பூ, சாமந்திப் பூ, ரோஜாப் பூ போன்ற பூக்களெல்லாம் அங்கே பயிரிடப்பட்டு, அவற்றை விற்பனை செய்யமுடியாமல் விவசாயிகள் தத்தளிக்கிறார்கள். அருகிலே இருக்கிற சேலம், பெங்களூர் மற்றும் வெளி மாநிலங்களுக்கெல்லாம் ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலேதான், அப்படி உற்பத்தி செய்யக்கூடிய பூக்களை அங்கே பாதுகாப்பதற்கும், அடுத்த நாள் எடுத்துச் செல்வதற்கும் ஏற்றவகையிலே குளிர்பதனக் கிடங்கு ஒன்றை, காவேரிப்பட்டினம் பகுதியை மையமாகக் கொண்டு கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பட்டினம் தொகுதியில் மல்லிகைப் பூ குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை என்று தெரிவித்தேன். இருப்பினும், மல்லிகைப் பூ குளிர்பதனக் கிடங்கு அமைக்க தனியார் நிறுவனங்கள், விவசாயக்

2009 ஜூலை 8]

குழுக்கள் ஏதேனும் முன்வந்தால் நடுவண் அரசின் நிறுவனமான தேசிய தோட்டக்கலை இயக்கம் (National Horticulture Mission) மூலமாக முதலீடு மானியம் பெற்றுத் தர, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகத் துறைமூலமாக அனைத்து உதவிகளும் வழங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தனியார் முன்வந்தால், அரசு ஆவன செய்யும் என்ற ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். பூக்கள் அதிகமாகப் பயிரிடப்படுகிற காரணத்தினாலே, தனியார் குளிர்பதனக் கிடங்குகளை ஊக்குவிப்பதோடு நின்றுவிடாமல், சுற்றிலும் இருக்கிற அந்த விவசாயிகள் பூக்களைப் பயிரிடுவதற்கும் ஊக்கப்படுத்தக்கூடிய வகையிலே, உழவர்களுக்கு அரசு மானியம் வழங்குமா? அப்படி மானியம் வழங்கி, உற்பத்தி செய்யக்கூடிய பூக்களை அரசு கொள்முதல் செய்யுமா? அல்லது, வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்குண்டான வழிவகைகளை அரசு செய்து தருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, காவேரிப்பட்டினம் தொகுதியில் 200 எக்டேர் பரப்பில் மல்லிகை சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த 3 ஆண்டுகளில், இப்பகுதிகளில் 68 எக்டேர் பரப்பில் மல்லிகை சாகுபடி செய்ய, எக்டேர் ஒன்றுக்கு ரூ.12,000/- வீதம் தேசிய தோட்டக்கலை இயக்கம்மூலமாக மானியம் பெற்றுத் தரப்பட்டிருக்கிறது. கிருஷ்ணகிரி மற்றும் அருகிலேயுள்ள தருமபுரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் அனைத்து மலர்களும் அருகிலுள்ள பெங்களூருக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து விமானங்கள்மூலம் மற்ற மாநிலங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. அதேபோல், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் மலர்கள், தமிழகத்திலுள்ள இதர பகுதிகளுக்கு உடனுக்குடன் எடுத்துச் செல்லப்படுகின்றன. எனவே, இப்பகுதிகளில் சாகுபடி செய்யப்படும் மலர்களைக் குளிர்பதனக் கிடங்குகளில் வைத்துப் பாதுகாத்துப் பராமரித்து, பின்பு விற்பனை செய்யவேண்டிய சூழ்நிலை இல்லை என்றுதான் அரசு கருதுகிறது.

[2009 ஜூலை 8

முற்பகல் 9-35

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் கேட்ட அந்தக் கேள்வியின் அடிப்படையில், தமிழக அரசு, 2007 ஆம் ஆண்டில் புதிய தொழிற் கொள்கையை வகுத்து அறிவித்திருக்கின்றது. அந்தக் கொள்கையின் அடிப்படையில், வேளாண் விளை பொருட்களைப் பதப்படுத்துவதற்காக, தனிப்பட்ட முறையில் அமைக்கப்படும் சிறிய மற்றும் நடுத்தர குளிர்பதன சேமிப்பு நிலையங்களுக்கு, அவை செயல்படத் தொடங்கிய முதல் ஆண்டில் 30 சதவிகிதமும், இரண்டாம் ஆண்டில் 20 சதவிகிதமும், மூன்றாம் ஆண்டில் 10 சதவிகிதமும் மின் கட்டண மானியம் வழங்கப்படவிருக்கிறது. வேளாண் விளை பொருட்கள் பதப்படுத்தும் புதிய பிரிவுகள் அனைத்திற்கும், அவை வணிக ரீதியான உற்பத்தியைத் தொடங்கும் நாளிலிருந்து ஐந்தாண்டுகளுக்கு மின்சார வரி செலுத்துவதிலிருந்து 100 சதவிகித விலக்கு அளிக்கப்படுகிறது. ஏற்றுமதி செய்யும் பொருட்டு, H.A.C.C.P. மற்றும் இதர காப்பு சம்பந்தப்பட்ட பன்னாட்டுச் சான்றுகளைப் பெறுவதற்காக, உணவுப் பொருட்களைப் பதப்படுத்தும் தொழிலில் ஈடுபடுகின்ற சிறிய மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு, அவை செய்யும் செலவில் 50 சதவிகிதம் அல்லது அதிகபட்சமாக 5 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்றெல்லாம் கொள்கை வகுத்திருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவரே முன்வந்தாலும் சரி, அல்லது யாராவது இதுபோன்ற தொழிலைத் தொடங்குவதற்கு முன்வந்தாலும் சரி, இந்த வசதிகளெல்லாம் அவர்களுக்கு ஏற்படுத்தித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு விவசாய மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், எங்களுடைய பகுதியில், காவல்கிணறு சந்திப்பில் மலர் வணிக வளாகம் அமைக்கப்படும் என்று சொல்லி, உடனடியாக கடந்த ஆண்டு மே மாதம் 10 ஆம் தேதி, மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுடைய திருக்கரங்களால் ஆரம்பிக்கப்பட்டு, பணி முழுமையாக முடிவடைந்து, விவசாயிகள் பயன்படும்வண்ணம் ஏற்பாடு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே இடத்தில் இன்னும் அதிகமான அரசு இடங்கள் 8 எக்டேருக்கு மேல் இருக்கின்றது. அந்தப் பகுதி விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற காய்கறிகளையெல்லாம் அந்த இடத்தில் வைத்து

2009 ஜூலை 8]

விற்பதற்கு, குளிர்சாதன வசதியுடன் கூடிய ஒரு மெகா உழவர் சந்தை அமைத்துத் தருவீர்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு அவர்கள், மலருக்காக அங்கே வணிக வளாகம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்கிதான், அதை அமைத்திருக்கின்றோம். புதிதாகக் காய்கறி மார்க்கெட் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். அதைப்பற்றி, வேளாண்மை விற்பனைத் துறை ஆணையரிடத்திலே தகவல் தெரிவித்திருக்கின்றேன். அங்கே விற்பனை செய்வதற்கு எந்த அளவிற்குக் காய்கறிகள் வரும் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்து, தேவையானால் அங்கே உழவர் சந்தையைப்போல, ஒரு மார்க்கெட்டை ஏற்படுத்தித் தர முயற்சி எடுக்கப்படும். அதேநேரத்தில், அப்படிக் கொண்டுவரக்கூடிய காய்கறிகள் விற்பனையாகாமல் எவ்வளவு நிலுவையில் நிற்கும் என்ற அந்தக் கணக்கும் எடுக்கப்பட்டு, அப்படியிருக்குமானால், அதற்குத் தேவையான குளிர்பதனக் கிடங்கு ஒன்றும், இப்பொழுது எப்படி உழவர் சந்தைகளில் அமைத்துக் கொடுத்திருக்கிறோமோ, அதேபோல அமைத்துக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். ரவிச்சந்திரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

92—

குளிர்சாதனப் பேருந்துகள்

***64279—திரு. எல். ரவிச்சந்திரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் குளிர்சாதன நகரப் பேருந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?